வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ந.க.எண்.370 /ஆ1 /2024 நாள். 04.03.2024.

பொருள் : பள்ளிக்கல்வி – மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு பள்ளிகளில் 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டு ஆண்டு விழா நடத்துதல் – மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு ஆணை பெறப்பட்டமை – அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கு NEFT மூலம் தொகை விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது – பயன்பாட்டு சான்று சமர்ப்பிக்க தெரிவித்தல் – சார்பு

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.241 பள்ளிக் கல்வி (பள்ளிக் கல்வி 5(1) துறை நாள்.15.12.2023
2.மாண்புமிகு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் மானியம் கோரிக்கை அறிவிப்புகள் 2023 – 2024 அறிவிப்பு எண்.7
3.பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.45428/எம்/இ2/2023 நாள்.16.02.2024
4.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.20.02.2024

&&&&&

பார்வை 3இல் செயல்முறைகளின்படி 2023 – 2024 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் ஆண்டு விழா நடத்துதல் பொருட்டு நிதிஒதுக்கீடு செய்து ஆணை பெறப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 4இல் காணும் இவ்வலுவலக 20.02.2024 நாளிட்ட கடிதம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளின் வங்கிக்கணக்கிற்கு NEFT மூலம் விடுவிக்கப்பட்டது.

அவ்வாறு விடுவிக்கப்பட்ட தொகைக்கான பயன்பாட்டு சான்றினை மூன்று நகல்களில் தயார் செய்து தலைமையாசிரியர் மேலொப்பத்துடன் வேலூர் மாவட்ட கல்வி அலுவலகத்தில் (இடைநிலைக் கல்வி) 06.03.2024க்குள் சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசு உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.

நகல்,
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
மாவட்டக் கல்வி அலுவலகம்,
வேலூர். (தொடர்நடவடிக்கையின் பொருட்டு)